DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 114/2022

Deposition of cross of Pw5 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | பாஸ்கர் |
| Father's Name | சௌந்தர்ராஜன் |
| Village | குத்தாலம் |
| Age | 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26

( Accused present)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 முதல் 4 வரையிலானவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு பின்பு எங்கு சென்றோம் என்றால் குத்தாலம் காவல் நிலையத்திற்கு சென்றோம். இந்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவத்திற்கு முன்பு எதிரிக்கும், அ.சா.2 ற்கும் எந்த முன் விரோதமும் இல்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்பு எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் மறுநாள் எனது வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். போலிசார் விசாரித்து கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் எனது மைத்துனரை எதிரி கெட்ட வார்த்தைகளால் திட்டி தாக்கி கொலை மிரட்டல் விடுத்தது சம்பந்தமாக எழுதப்பட்டிருந்தது. அதை தவிர வேறு எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் துப்புரவு பணியாளராக இருப்பதால் அடிக்கடி காவல் நிலையம் செல்வேன் என்றால் எங்கள் மேல் அதிகாரி சொன்னால் எப்போதாவது செல்வேன். இரண்டு முறை சென்றுள்ளேன். எனக்கு காவல் அதிகாரிகள் நன்கு பழக்கம் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு சுத்தம் செய்ய நான் அடிக்கடி செல்வதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

S. பாஸ்கர்.

என்னால் எழுதிக் கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

3/3/26

நீதித்துறை நடுவர் எண் 1

மயிலாடுதுறை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 114/2022

Deposition of cross of Pw4 Dt. 03.03.2026

| | |
|---|---|
| Name | மாரிமுத்து |
| Father's Name | சௌந்தர்ராஜன் |
| Village | குத்தாலம் |
| Age | 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.03.26

( Accused present)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 முதல் 3 வரையிலானவர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 12. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார்6,7 நபர்கள் இருந்தார்கள். மேற்படி 6,7 நபர்களும் உறவினர்கள் என்றால் சரிதான். வெளி நபர்கள் யாரும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து எனது வீடு எவ்வளவு தூரம் தள்ளி உள்ளது என்றால் 20 மீ தள்ளி உள்ளது. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் அரை மணி நேரம் நடந்தது. மேற்படி அரைமணி நேரத்தில் உறவினர்கள் 6,7 நபர்கள் மட்டும் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எதிரி அ.சா.2 ஐ கெட்ட வார்த்தைகளால் திட்டி கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று திட்டிக்கொண்டிருந்தார். அ.சா.1 ன்குடும்பத்திற்கும், எதிரிக்கும் மேற்படி சம்பவத்திற்கு முன்பு எந்த முன் விரோதமும் இல்லை என்றால் சரிதான். எந்த முன் விரோதமும் இல்லை என்பதால் எதிரி கொலை செய்து விடுவதாக மிரட்டியதற்கு எந்த காரணமும் இல்லை என்பதால் நான் எனது உறவினர்களுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து முடிந்தவுடன் எங்கு சென்றோம் என்றால் குத்தாலம் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்து வேறு எங்கு சென்றோம் என்றால் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மேற்படி விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் கருமாதி காரியத்தின்போது எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட தகராறில் அ,சா.2 க்கு வீட்டு அருகாலின் மோதி ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எனது உறவினருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சௌ. மாரிமுத்து.

ஏற்கப்பட்டது